DECEMBER 2022 **U/ID 22012/UCN1B**

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer any TEN questions each in 30 words.

1. What were the Frontiers of Ancient Tamilaham?

   பழங்கால தமிழகத்தின் எல்லைகள் யாவை?

2. What were the titles assumed by the Cheras of the Sangam Age?

   சங்ககால சேர மன்னர்கள் சூட்டிக்கொண்ட புனைப்பெயர்கள் யாவை?

3. What were the literary sources available to know the history of the Kalabhras?

   களப்பிரர்களைப் பற்றி அறிய உதவும் இலக்கிய ஆதாரங்கள் யாவை?

4. List out the Monolithic Rathas at Mamallapuram.

   மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் ரதங்களைப் பட்டியலிடுக.

5. Mention the copper plates issued by the rulers of the First Pandyan Empire.

   முதல் பாண்டிய பேரரசு மன்னர்களால் வழங்கப்பட்ட செப்புப் பட்டையங்களைக் குறிப்பிடுக.

6. What do you mean by Rajakesari and Parakesari?

இராஜகேசரி மற்றும் பரகேசரி என்றால் என்ன?

7. What were the titles assumed by Rajendra I?

முதலாம் இராஜேந்திர சோழன் சூட்டிக்கொண்ட புனைப்பெயர்கள் யாவை?

8. What were the administrative divisions of the Imperial Chola Empire?

பிற்காலச் சோழப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகள் யாவை?

9. Mention some variams, which were exited during Imperial Chola region?

பிற்காலச் சோழர்களின் ஆட்சிக்காலத்தில் இருந்த வாரியங்கள் சிலவற்றை குறிப்பிடுக.

10. What were the taxes levied upon the cultivated lands during the second Pandyan Empire?

இரண்டாம் பாண்டிய பேரரசின் ஆட்சி காலத்தில் விளைநிலங்கள் மீது விதிக்கப்பட்ட வரிகள் யாவை?

11. What is Brahmadeyam?

பிரம்மதேயம் என்றால் என்ன?

12. Mention the provincial administrative divisions of the Second Pandyan Empire?

இரண்டாம் பாண்டிய பேரரசின் மாகாண நிர்வாக பிரிவுகளை குறிப்பிடுக.

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions each in 200 words.

13. Write a short note about three Sangams of Ancient Tamil Country.

பழங்கால தமிழகத்தில் இருந்த மூன்று தமிழ் சங்கங்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

14. Give an account on Adigaman of Tagadur.

தகடூரை ஆண்ட அதிகமான் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

15. Write a short note about Arikesari Parankusa (Kunpandyan).

கூன்பாண்டியன் என்று அழைக்கப்படக்கூடிய அரிகேசரி பராங்குசன் என்னும் பாண்டிய மன்னன் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

16. Give a brief account on Virapandya.

வீரபாண்டியன் எனும் பாண்டிய மன்னன் பற்றி சுருக்கமாக கூறுக.

17. Explain NarasimhavarmanI's contribution to Architecture.

கட்டிடக்கலையில் முதலாம் நரசிம்மவர்மனின் பங்களிப்பை விவரி.

18. Write a short note on Tanjavur Big Temple.

தஞ்சை பெரியகோவில் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

19. Explain Kumarakampana's expedition to Tamil Country.

தமிழ்நாட்டின் மீது குமாரகம்பனாவின் படையெடுப்பு பற்றி விவரி.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions each in 500 words.

20. Discuss the Literary sources available for the study of the History of Sangam Age.

சங்ககாலத்தைப் பற்றி படிக்க உதவக்கூடிய இலக்கிய ஆதாரங்கள் பற்றி விரிவாக எழுதுக.

21. Write an Essay about the life and achievements of Mahendravarman I.

முதலாம் மகேந்திரவர்மனின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

22. Discuss the Religious condition under the first Pandyan Empire.

முதலாம் பாண்டிய பேரரசின் சமய நிலை பற்றி விவரி.

23. Explain in detail about the administration of the Imperial Cholas.

பிற்காலச் சோழப் பேரரசின் நிர்வாக முறை பற்றி விரிவாக எழுதுக.

24. Write an Essay about Maravarman Sundara Pandya I.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

———————